**<u>நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.</u>**

**<u>சி.சி. 65/2018</u>**

2023ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 21ம் நாள் செவ்வாய்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 1வது நபாின் வாக்குமுலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிாிவின் ஏற்பாட்டின்படி திரு.எஸ்.பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சௌந்தரபாண்டியன் | வயது | 40 |
| த.பெ.(அ)க.பெ. | அருணாசலம் | தொழில் | தலைமை காவலர் |
| ஊர்/பணிபுரியுமிடம் | குரிசிலாப்பட்டு | சமயம் | இந்து |
| வட்டம் | திருப்பத்தூர் | சாதி | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | | |

<u>முதல் விசாரணை :</u>

(1) நான் குரிசிலாப்பட்டு அடுத்த அண்ணாநகரில் வசிக்கிறேன். நான் தமிழ்நாடு காவல்துறையில் தலைமை காவலராக பணிபுரிகிறேன். தற்சமயம் ஜோலார்பேட்டை காவல் நிலையத்தில் பணியில் உள்ளேன். விபத்தில் இறந்துபோன அபிநயா எனது பெரிய மகள். கடந்த 09.01.2018 அன்று மாலை எனது குழந்தைகள் அபிநயா மற்றும் ஜோதிஸ்ரீ, ஆகியோர் எனது தம்பி இளையராஜாவுன் கடைக்கு நடந்து சென்றுள்ளார்கள். அவர்கள் திருப்பத்தூர் டு ஆலங்காயம் சாலை அண்ணாநகர் பேருந்து நிறுத்தம் அருகில் சண்முகம் என்பவரது மகன் சௌந்தர்ராஜன் என்பவரது வீட்டின் அருகில் நடந்து சென்று கொண்டிருந்த போது அவர்களுக்கு பின்னால் வந்த பாண்டியன் தனியார் பேருந்து அவர்கள் மீது மோதி விபத்து ஏற்படுத்திவிட்டது.

(2) அந்த சமயம் நான் சம்பவயிடத்திலிருந்து சுமார் 1 கி.மீ தொலைவில் உள்ள பாப்பானூரில் இருந்தேன். அப்போது என்னுடன் இருந்த எனது மச்சான் முக்கேஷிற்கு சாலை விபத்து குறித்து போன் முலம் யாரோ தகவல் சொன்னார்கள். உடனடியாக நான் சம்பவயிடத்திற்கு சென்றேன். எனது முதல் மகள் சம்பவயிடத்திலேயே இறந்துவிட்டார் என தெரிந்தது. எனது இளைய மகள் மற்றும் எனது தம்பி இளையராஜாவிற்கு கடுமையான காயங்கள் ஏற்பட்டிருந்தது. எனது தம்பிக்கு வலது கால் நசுங்கிவிட்டது. பின்னர் சிகிச்சையின் போது அந்த காலை அகற்றிவிட்டார்கள். எனது இளைய மகள் தலை மற்றும் உடலில் காயங்கள் ஏற்பட்டிருந்தது. 108 ஆம்புலன்ஸ் முலம் திருப்பத்தூர் அரசு

மருத்துவமனைக்கு கொண்டுவந்தோம். எனது இளையமகள் மற்றும் தம்பியை மேல் சிகிச்சைக்காக வேலூர் சிஎம்சி மருத்துவமனைக்கும் அனுப்பி வைத்தார்கள். நான் சம்பவயிடத்திற்கு வருவதற்குள்ளாகவே அந்த பேருந்தை ஓட்டி வந்த நபர் அங்கிருந்து ஓடிவிட்டார். நான் அவரது விவரங்களை பின்னர் கேட்டு தெரிந்து கொண்டேன். அவரது பெயர் கார்த்திக் என்று தெரிந்தது. விபத்து சம்மந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் நான் அளித்த புகார் ஆகும். புகார் அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசரணை</u>=

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்யப்படாமல் முடிக்கப்பட்டது.